மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.127/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரசாந்த் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | அங்கமுத்து | வகுப்பு | --- |
| வயது | | சமயம் | --- |
| நாள் | 22.08.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.2 | | |

இன்று 22.08.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

1) நான் தற்போது மேச்சேரி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் அசல் மற்றும் சான்றிட்ட நகல்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன்.

2) இந்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கபெற்ற அழைப்பாணையின் பெயரில் சாம்ராஜ் பேட்டை, சுபாஷ் நகல், மேச்சேரி டவுண், மேச்சேரி என்ற முகவரியில் சென்று கடந்த 06.08.2024 மற்றும் 07.08.2024 ஆகிய தேதிகளில் விசாரித்தபோது மணிமேகலை க/பெ செல்வராஜ் என்ற பெயரில் மேற்படி முகவரியில் யாரும் வசிக்கவில்லை என தெரியவந்தது. பின்னிட்டு மேற்படி மணிமேகலை என்பவரது அடையாள ஆவணங்களை பெற்று, க.எண்.16/1-395, ராஜ தியேட்டர் (KS தியேட்டர்) வடக்கு, மேச்சேரி கிராமம் என்ற முகவரியில் சென்று விசாரித்தபோது மணிமேகலை க/பெ கோவிந்தராஜ் மேற்படி முகவரியில் வாடகை வீட்டில் என்பவர் வசித்ததாகவும், தற்போது அங்கிருந்து குடிபெயர்ந்து க.எண்.17/1-139A, நெசவாளர் காலனி, கந்தசாமிபுரம், மேச்சேரி கிராமம் என்ற முகவரிக்கு சென்று விட்டதாகவும் சாட்சிகளை விசாரித்தனன் அடிப்படையில் தெரியவந்தது.

3) மேற்படி எனது விசாரணை அறிக்கையை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். மேற்படி அறிக்கை வாதி தரப்பு மூன்றாம் நபர் சாட்சியின் சான்றாவணம் **சா.சா.ஆ.1 (Ex.X.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) மேற்படி முகவரியில்சென்று நான் விசாரித்தபோது மூன்றாம் பிரதிவாதி மணிமேகலை என்பவரது குடும்பம் குறித்து ஏதேனும் தெரியவந்ததா என்றால், மேற்படி மணிமேகலையின் கணவர் கோவிந்தராஜ் என்பவர் கடந்த 03.01.2016 ம் தேதியில் இறந்துவிட்டதாகவும், மேற்படி நபர்களுக்கு முகேஷ் வயது 24, என்ற மகன் உள்ளதாகவும், தற்போது பெங்களூரில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வருவதாகவும் என் விசாரணையில் தெரிய வந்தது.

**<u>இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 165 ன் கீழ் நீதிமன்ற கேள்வி:–</u>**

1) மேற்படி மணிமேகலை க/பெ கோவிந்தராஜ் என்பவர் எந்த தேதியில் க.எண்.16/1–395, ராஜ தியேட்டர் (KS தியேட்டர்) வடக்கு, மேச்சேரி கிராமம் என்ற முகவரியில் குடிபெயர்ந்து சென்றார் என்பது குறித்து என் விசாரணையில் தெரியவந்ததா என்றால், மேற்படி நபர் கடந்த 30 ஆண்டுகளாக மேச்சேரியில் வெவ்வேறு முகவரியில் வசித்து வந்துள்ளார். ஆனால், அவரது தற்போது வரை அரசு அடையாள ஆவணங்கள் மேற்படி க.எண்.16/1–395, ராஜ தியேட்டர் (KS தியேட்டர்) வடக்கு, மேச்சேரி கிராமம் என்ற முகவரியில் தான் உள்ளது.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.